சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

அசல் வழக்கு எண்.235/2019

20.01.2026

பி.வா.சா.1 திரு. ராமநாதன், த/பெ. கனகசபாபதி

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

வாதி பிராதில் சொல்லியுள்ள சொத்து விவரம், விஸ்தீரணம் எனக்கு தெரியும் என்றாலும் வாதி எனது சகோதரர் என்றாலும் சரிதான். தாவா அ பட்டியல் சொத்து எனது தகப்பனார் கனகசபாபதிக்கு சொந்தமானது என்றால் சரிதான். தாவா ஆ அயிட்ட சொத்தை வாதி விஸ்வநாதன் என்பவரிடமிருந்து 12.06.1981 ல் கிரயம் பெற்றார் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் பெயரில் கிரயம் பெற்றால் லேண்ட்சிட்டிங் ஆக்ட் கீழ் வரும் என்பதால் என் சகோதரர் பெயரில் என் தகப்பனார் கிரயம் வாங்கினார். நான் வழக்கிற்காக பொய்சொல்கிறேன் என்றாலும் வாதிக்கு 1981 ஆம் வருடம் சொத்தை வாங்கும் அளவிற்கு வருமானம் இல்லை என்றால் சரியல்ல. எனது தகப்பனார் இருந்தவரை சொத்துக்களை பொறுத்து எதுவும் எழுதிவைக்கவில்லை என்றால் சரியல்ல. எனது தகப்பனார் இருக்கும் போதே பெண்பிள்ளைகளுக்கும் சேர்த்து பிரித்துக்கொடுத்துவிட்டார். எனது தகப்பனார் இருக்கும் போதே பாகப்பத்திரம் எழுதிக்கொண்டோம். பாகப்பத்திரம் எந்த வருடம் ஏற்பட்டது என்ற விவரத்தை நான் சொல்லவில்லை என்றாலும் ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. எனது தகப்பனார் 1990 ல் இறந்துவிட்டார். எனது தகப்பனார் இறந்த பின்னிட்டு 1995 ஆம் வருடம் பாகம் செய்துக்கொண்டோமா என்றால் இல்லை. எதிர்வழக்குரையில் 12.06.1995 ல் பாகப்பத்திரம் செய்துக்கொண்டதாக சொல்லியுள்ளேன் என்றால் எனக்கு நரம்பு கோளாறு இருப்பதால் அதிகமாக ஞாபகமில்லை. வாதி ஆசிரியராக இருந்ததால் பல ஊர்களில் பணிபுரிந்து வந்தார் என்றால் சரிதான். வாதி பல ஊர்களில் வேலை பார்த்துவந்த போதும் தாவா சொத்துக்கள் அவர் அனுபவத்தில்தான் இருந்து வந்தது என்றால் சரியல்ல. வாதிக்கு நிலம் எங்கு உள்ளது என்றே முன்பு தெரியாது, தற்போதுதான் தெரியும். வாதிக்கு சொந்தமான நிலத்தை நான் மேற்பார்வை மட்டுமே செய்துவந்தேன் என்றாலும் வாதி என்னை ஒரு போதும் சாகுபடி செய்ய அனுமதிக்கவில்லை என்றாலும் சரியல்ல. வாதியின் மகன் சாமிநாதன் சென்னையில் வசித்து வருகிறார் என்றால் சரிதான். வாதி தனது மகன் சென்னையில் இருப்பதாலும் தனது மனைவியின் சிகிச்சைக்ககாகவும் அடிக்கடி சென்னை சென்றதால் அதனை சாதகமாக பயன்படுத்திக்கொண்டு தற்போது சாகுபடி செய்ததாக பொய்சொல்கிறேன் என்றால் சரியல்ல. 40 வருடங்களாக சாகுபடி செய்ததற்கும் குத்தகை கொடுத்ததற்கும் ஆவணம் உள்ளதா என்றால் அண்ணன் என்பதால் வாங்கவில்லை.

நான் சொல்வது போல் குத்தகை எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை சாகுபடி செய்ததை காட்டும் விதமாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சாகுபடி செய்ததை காட்டும் விதமாக வருவாய் துறை ஆவணம் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 1998 ஆம் வருடத்திலிருந்தே தாவா சொத்துக்கள் வாதியின் நேரடி அனுபவத்தில்தான் இருந்தது என்றால் சரியல்ல. 2012 ஆம் வருடம் வாதி சென்னைக்கு அடிக்கடி சென்றதால் என்னிடம் மேற்பார்வை செய்ய ஒப்படைத்ததை பயன்படுத்திக்கொண்டு தற்போது தாவா சொத்தை திரும்ப ஒப்படைக்க மறுக்கிறேன் என்றால் சரியல்ல. அதன்படி தாவா தொகையை வாதிக்கு நான் கொடுக்க கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. வாதி தாவா சொத்தை அடமானம் வைத்து கடன் வாங்கி கொடுத்தாரா என்றால் இல்லை. எனது வீட்டிற்கு எதிர்புறம் வாதியின் வீடு உள்ளது என்றாலும் அவரின் அனுபவத்தில் அந்த வீடு உள்ளது என்றாலும் சரிதான். நான் முதல்விசாரணையில் சொல்லியுள்ள ஆணையுறுதி கடிதத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் சொல்வது போல் வாதியால் எந்த கடிதமும் எழுதிக்கொடுக்காததால் தான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் உள்ள மின் இணைப்பு என் பெயரில் உள்ளது. மின் இணைப்பு எந்த சர்வே எண்ணில் உள்ளது என்பதற்கான ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து வாதிக்கு பாகமாக ஒதுக்கப்பட்டது என்றாலும் அந்த சொத்தில்தான் வாதி தனது சொந்த செலவில் ஆழ்குழாய் அமைத்தார் என்றால் சரியல்ல. வாதி தாவா சொத்தை நேரடியாக அனுபவம் செய்ய முற்பட்ட போது பாதையை நான் தடை செய்தேன் என்றால் சரியல்ல. அதனால்தான் வாதி தடை உறுத்துக்கட்டளை பரிகாரமும் கேட்டு வழக்கை தாக்கல் செய்துள்ளார் . நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் எனது சொத்துக்குண்டானது என்றாலும் தாவா சொத்திற்கு உண்டானது இல்லை என்றாலும் சரியல்ல. 1995 ல் ஏற்பட்ட கரவோலைப்படி தாவா சொத்து வாதிகசு பாத்தியப்பட்டது என்றாலும் வாதி வெளியூரில் இருப்பதை பயன்படுத்தி கொண்டு சொத்தை குத்தகைக்கு விட்டதாக பொய்சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனவே தாவா சொத்தை பொறுத்து வாதி கோரும் வசப்பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.